1990 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசு இதன் தேவையை உணர்ந்து தான் ரெயில்வே துறைக்கு இதனை அனுப்பியுள்ளது. ரெயில்வே வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கான நிதி ஒதுக்கப் பட்டவுடன் சர்வே பணி மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தி ருக்கிறார்கள். விரைவில் இப்பணியை தொடங்க வேண்டுமென்று மாநில அரசு ரெயில்வே துறையை வலியுறுத்தும்.

திரு. கே. பிச்சாண்டி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் வழியாக புதுவையையும், கர்நாடகத்தை யும் இது குறைந்த தூரத்தில் இணைக்கும் திட்டமாகையால் திருவண்ணாமலையிலிருந்து ஜோலார்பேட்டை ஐங்சன் வரை ரெயில்வே பாதையை இணைக்கும் செயற்குறிப்பையும் மாநில அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் குறிப்பிட்டதைப் போல இந்தக் கருத்தை இவ்வரசு வலியுறுத்தும்.

தங்கத் தேர் இருக்கின்ற கோவில்கள்.

* 1080 திரு. மெ. ஆண்டி அம்பலம் :

மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் தங்கத் தேர் இருக்கின்ற கோவில்கள் எவை ?

(ஆ) இவற்றைப் பாதுகாக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் தங்கத் தேர் இருக்கின்ற கோவில்கள் மொத்தம் 12. அவை கீழ்வருமாறு:—

1. அருள்மிகு தண்டாயுதபாணிசாமி திருக்கோயில், பழனி
2. ‘‘ சுப்ரமணியசாமி திருக்கோயில், திருத்தணி.
3. ‘‘ சுப்ரமணியசாமி திருக்கோயில், திருச்செந்தூர்.
4. ‘‘ மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம்.
5. ‘‘ மீனாட்சியம்மன் திருக்கோயில், மதுரை.
6. ‘‘ தேவிகருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு
7. ‘‘ சுவாமிநாதசாமி திருக்கோயில், சுவாமிமலை.
8. ‘‘ வடபழனியாண்டவர் திருக்கோயில், வடபழனி.

9. அருள்மிகு சங்கரநாராயணசாமி திருக்கோயில், சங்கரன்கோயில்,
10. ,, காமாட்சியம்மன் திருக்கோயில், காஞ்சிபுரம்,
11. ,, முத்துக்குமாரசாமி திருக்கோயில், கந்தகோட்டம்
12. ,, பாலமுருகன் திருக்கோயில், ரத்தினகிரி.

(ஆ) தங்கத்தேர்கள் யாவும் அவை வைப்பதற்கென்று கட்டப்பட்டுள்ள பாதுகாப்பான கான்கிரீட் அறைகளில் முன் பக்கம் ரோலிங்ஷட்டர் இரும்பு கேட் போட்டு உள்பூட்டு, மற்றும் வெளிப்பூட்டுகள் போட்டு அரக்கு சீல் வைத்து பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. தங்கத் தேர்கள் பாதுகாப்புக்கு பகலிலும், இரவிலும் காவல் போடப்பட்டுள்ளது. இரவு காவலராக கூர்க்காக்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். தங்கத் தேர்கள் இரட்டைப்பூட்டு முறையில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம்.

* 2684 திரு. எஸ். டி. உகம்சந்த் :

மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

செங்கை—அண்ணா மாவட்டம் வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம் சீராக பராமரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

செங்கை—அண்ணா மாவட்டத்தில் வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்தினை சீராக பராமரிக்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. கடந்த ஆண்டுகளில் இந்தத் பறவைகள் புகலிடத்திற்காக இயற்கை பாதுகாப்பு திட்டத்தின்கீழ் பல்வேறு அபிவிருத்தி வேலைகளுக்காக செலவு அனுமதி அளிக்கப்பட்டு செலவு செய்யப்பட்டுள்ளது.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு அபிவிருத்தி செய்ய எவ்வளவு தொகை அனுமதிக்கப்பட்டு செலவுசெய்யப்பட்டிருக்கிறது? அதோடு அங்கே பல்வேறு சமயங்களில் புயல்களால் மரங்கள் விழுந்து இருக்கின்ற சூழ்நிலை இருப்பதாலும், தேசிய நெடுஞ்சாலையிலுள்ள மரங்களை அப்புறப்படுத்துவதாலும், வெளிநாடுகளைப் போல அங்கே மரங்களைக் கொண்டு சென்று நட அரசு நடவடிக்கை எடுக்குமா?